3. (அ) உடன் அனுமானம் என்றால் என்ன? (05 புள்ளிகள்)

(ஆ) எடுப்புகளின் நான்கு வகை முரண்பாடுகளையும் உதாரணங்களுடன் விளக்குக. (10புள்ளிகள்)

(இ) இருப்புப் போலியை உதாரணம் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

4. (அ) எதிர்மாற்றம் என்றால் என்ன? ஒரு வலிதான எதிர்மாற்றத்தின் விதிகளைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் எடுப்புகளின் எதிர்வைக்கையை எழுதுக.

I. எல்லாக் காகங்களும் கறுப்பு நிறமாகும்

II. எந்த மனிதனும் கடவுள் அல்ல

III. சில ஆசிரியர்கள் அன்பானவர்கள்

IV. சில நாய்கள் ஆபத்தானவை அல்ல

(03x4= 12புள்ளிகள்)

5. (அ) பின்வரும் நியாயத் தொடைகள் வாய்ப்பானதா அல்லது வாய்ப்பற்றதா எனத் தீர்மானிக்குக. நியாயத் தொடை வாய்ப்பற்றதாயின் மீறப்பட்டுள்ள விதி/விதிகளையும் இடம்பெற்றுள்ள போலி/போலிகளையும் குறிப்பிடுக.

I. எல்லா சிறார்களும் தைரியமானவர்கள்.
சில தைரியமான சிறார்கள் இலங்கையர்கள்.
ஆகவே, சில இலங்கையர்கள் தைரியமானவர்கள்.

II. சில புத்தகங்கள் நாவல்கள்.
சில நாவல்கள் சுவாரஸ்யமானவையாகும்.
ஆகவே, சில சுவாரஸ்யமான விடயங்கள் புத்தகங்களாகும்.

III. பெண்கள் மட்டுமே அப்பாவிகள்.
எந்த சிறுவனும் அப்பாவி அல்ல.
ஆகவே, எந்த சிறுவனும் பெண் அல்ல.

IV. சில கறுப்பு நிறமுடையவை பறப்பதில்லை.
ஏனெனில் பறக்கும் அனைத்தும் பறவைகள்.
அத்துடன் சில பறவைகள் கறுப்பு நிறமாகும்.

(04x4= 16புள்ளிகள்)

P.T.O.

(ஆ) பேரெடு கூற்று குறை எடுப்பாகவும் சிற்றெடு கூற்று மறை எடுப்பாகவும் அமைந்தால் வலிதான முடிவு எதுவும் சாத்தியமில்லை ஏன் என்பதை நியாயத் தொடையின் பிரதான விதிகளைக் கொண்டு விளக்குக.

(04 புள்ளிகள்)

6. உமது சுருக்கத்திட்டத்தினைத் தந்து, பின்வரும் வாதங்களைக் குறியீட்டாக்கம் செய்து, அவற்றின் வாய்ப்பினை பயனிலைத் தர்க்கத்தின் வழியே துணிக.

(அ)

I. எல்லா மனிதர்களும் மெய்யியலாளர்கள்.
பிளேட்டோ ஒரு மனிதன்.
ஆகவே, பிளேட்டோ ஒரு மெய்யியலாளன்.

II. எந்த ஆசிரியரும் மாணவன் அல்ல.
பேராசிரியர்கள் அனைவரும் ஆசிரியர்கள்.
ஆகவே, எந்த பேராசிரியரும் மாணவன் அல்ல.

(02x5= 10புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றை உதாரணங்கள் தந்து விளக்குக.

I. நிறைத் தனியனாக்கல் விதி

II. குறைப் பொதுமையாக்கல் விதி

(02x5= 10புள்ளிகள்)

7. (அ) சதுஸ்கோடி என்றால் என்ன?

(ஆ) ஜைனத்தில் சியாத்வாதத்தின் இயல்பை ஆராய்க.

(02x10= 20புள்ளிகள்)

8. (அ) நியாய அளவையியலில் 'பிரத்தியட்சம்' பற்றி கலந்துரையாடுக.

(ஆ) சுவார்த்தனுமானத்தையும் பரார்த்தனுமானத்தையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(02x10= 20புள்ளிகள்)

P.T.O.

9. (அ) நியம மற்றும் நியமமில் போலிகளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டைத் தருக.
(05 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் நியமமில் போலிகளை உதாரணங்கள் தந்து சுருக்கமாக விளக்குக.

I. சமுதாயப் போலி

II. கவர் பொருட்பாட்டுப் போலி

III. முடிவு மேற்கொள்ளல் போலி

(03×5= 15 புள்ளிகள்)

10. பின்வருவனவற்றுள் ஏதாவது <u>நான்கு</u> பற்றிக் குறிப்புரை தருக.

I. உண்மையும் வாய்ப்பும்

II. சிக்கல் இருதலைக்கோள்

III. பாணிமை வேறுபாடு (Stylistic Variants)

IV. வெற்று வகுப்பு

V. பொருந்த முடிவுப் போலி

VI. எடுப்புக்களும் வாக்கியங்களும்

(05×4=20 புள்ளிகள்)

**UNIVERSITY OF PERADENIYA**
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**Bachelor of Arts (External –New Syllabus) Examination 100 Level – 2024**
**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 100 මට්ටම - 2024**
**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 100 வது தேர்ச்சி மட்டம் – 2024**

## (PHYE 102- LOGIC AND LOGICAL THEORY)

## (PHYE 102 - அளவையியலும் அளவையியல் கோட்பாடும்)

කාලය පැය (03) තුනයි.
மூன்று(03) மணித்தியாலங்கள்.
Time **(03)** three Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 10 කි.
There are **10** questions in the question paper.
இந்த வினாப்பத்திரத்தில் 10 வினாக்கள் உள்ளன.

ප්‍රශ්න **05** කට පමණක් පිළිතුරු සපයන්න.
Answer **Five** (05) Questions only
**05** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

1. (அ) அரிஸ்டோட்டிலிய அளவையியலின் பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.

I. பதம் II. எடுப்பு

(02×5= 10புள்ளிகள்)

(ஆ) விமர்சன சிந்தனை என்றால் என்ன? விமர்சன சிந்தனையின் முக்கிய அம்சங்களை விளக்குக. (10புள்ளிகள்)

2. (அ) பலமான வாதங்களுக்கும் பலமற்ற வாதங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைத் தருக.

(06புள்ளிகள்)

(ஆ) நான்கு வகை அறுதி எடுப்புகளின் பதங்களின் வியாப்தி நிலையை விளக்குக.
(04புள்ளிகள்)

(இ) உய்த்தறி மற்றும் தொகுத்தறி வாதங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. (10புள்ளிகள்)

P.T.O.